1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒருவருமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, மதுரைக் கல்லூரி உயர் நிலைப் பள்ளி இரண்டாவது கிரேடு தமிழ் ஆசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் எல்லாம் புதுச் சம்பளத்தைப் பெற்ற பிறகும் கூட பல மாதங்களுக்குப் புதுச் சம்பளம் கொடுக்கப்படவில்லையென்று புகார் வந்ததா? இப்போது கொடுக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரைக் கல்வி மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இரண்டாம் நிலை பண்டிதர்கள் சம்பளம் இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளின் படி இப்போது நிர்ணயிக்கப்பட்டுவிட்டது.

Hunger-strike by Teachers

* 174 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of teachers serving in the High Schools in the Madurai Educational District, who resorted to hunger-strike in front of the school in the course of the year 1971–72;

(b) the reasons therefor; and

(c) the action, if any, taken thereon?

ஆசிரியர்கள் உண்ணாவிரதம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72 ஆண்டுக் காலத்தில் மதுரைக் கல்வி மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் எத்தனை ஆசிரியர்கள் பள்ளிகளின் முன்பு உண்ணாவிரதமிருந்தனர்?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அதன் மீது நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியர் ஒருவர் அப்பள்ளி யின் முன்பு 2—11—1971-லும், 31—1—1971-லும் உண்ணாநோன்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேற்கொண்டார். முதன்மைக் கல்வி அதிகாரியின் ஆணைப்படி பள்ளி நிர்வாகத்தினர் அவ்வாசிரியரைப் பள்ளியில் மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொள்ள மறுத்ததே அதற்குக் காரணமாகும்.

(உ) மாவட்டக் கல்வி அதிகாரி தலையீட்டினால், அவ்வாசிரியர் உண்ணா நோன்பை நிறுத்தினர். பள்ளிக் கல்வி இயக்குநர் பள்ளி நிர்வாகத்தினரின் அப்பீல் மனுவை நிராகரித்து ஆணையிட்டார். அதையொட்டி ஆசிரியர் 8—2—72 ம் நாள் அப்பள்ளியில் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்.

Teacher Pensioners

*175 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether 50 per cent of the Dearness Allowance recommended by the Second Pay Commission to teacher pensioners has been paid to teachers retired from aided institutions; and

(b) if not, when such payment can be expected?

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இரண்டாவது சம்பள ஆணைக் குழுவால் பரிவுரை செய்யப்பட்ட 50 சதவீத அகவிலைப் படி, மானியம் பெறும் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், அது எப்போது கொடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படலாம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இரண்டாம் சம்பளக்குழு இப்பொழுது வரையறுத்துள்ள கிராக்கிப்படிக்கு மேலாக உயர்வு கிராக்கிப்படியளிக்கக் குறிப்பிடும்பொழுது அந்த உயர்வில் பாதியை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் அளிக்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே 1—5—72 முதல் அரசுப் பணியாளர்களுக்கு எப்ரல் திங்களில் வழங்கிய கிராக்கிப்படியில் (ஒத்த வீதத்தில் ரூ. 10) 50 விழுக்காடு அளவில் ஓய்வு பெற்ற எல்லா ஆசிரியர்களுக்கும் ரூ. 5 கிராக்கிப்படியாக அளிக்க ஆணையிட்டுள்ளனர்.